தந்தானைத் துதிப்போமே - திருச்
சபையாரே, கவி - பாடிப்பாடி.
.
Thanthaanai thuthipomae – Thiru
Sabaiyaare kavi paadi paadi

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிக மிகத் .
.
Vinthaiyaay namak kananthamaana
Villarkariyathor nanmai miga miga

1.ஒய்யாரத்துச் சீயோனே - நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும்
.
Oyaarathu seeyonae – Neeyum
Meyaaga kali koornthu nernthu
Aiyan yesukunin kaiyai koopi thuthi
Seiguvaiyae magizh kolluvaiyae naamum

2.கண்ணாரக் களித்தாயே - நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே
.
Kannara kalithaaye Nanmai
Kaatchiyai kandu rusithu pusithu
Ennukadangaatha ethanaiyo nanmai
Innumunmaer sonaa maari porpeithumae

3.சுத்தாங்கத்து நற்சபையே - உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்
.
Suthaangathu narsabaiyae – Unai
Mutraai kollavae alainthu thirinthu
Sathu kulainthunai sathiyaakka thammin
Rathathau sinthi eduthae uyir varam

4.தூரம் திரிந்த சீயோனே - உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை
.
Thooram thirintha seeyonae – Unai
Thooki eduthu karathil Yaenthi
Aarangal pooti alangarithu ninai
Athan manavaati yaakinathu ennai